தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 14, திருவள்ளுவர் ஆண்டு – 2046

2015 ஆகஸ்ட் 31, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு."

அன்பு மற்றவர்களிடம் விருப்பம் உடையவராய் வாழும் தன்மையைத் தரும். அதுவே அனைவரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பையும் தரும்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. து.மெ. தைலப்பன் அவர்கள் 27–4–2015 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. து.மெ. தைலப்பன் அவர்கள் 1977 முதல் 1980 வரை ஒரத்தநாடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

166—

கண்காணிப்புக் குழு

***51923—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட கரும்பு விலை கரும்பு விவசாயிகளுக்குக் கிடைப்பதைக் கண்காணிக்க குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் அரசு நிர்ணயித்த விலையை உடனடியாக அமல்படுத்துவதை உறுதி செய்து கண்காணிக்க ஏற்கெனவே மாவட்ட ஆட்சியர் மற்றும் சர்க்கரைத் துறை இயக்குநர் இருக்கின்ற காரணத்தினால் இதற்கு அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.